அக்டோபர் - 2011

திருவள்ளுவர் ஆண்டு 2042

செந்தமிழ்

தொகுதி : 55
பகுதி : 12

விலை ரூ. 10/-

திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

64வது சுதந்திர தின கொடியேற்று விழா
பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவர்களுடன்
இரு பெரும் செயலாளர்கள்

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 55 திங்கள் இதழ்

பகுதி : 12 திருவள்ளுவர் ஆண்டு 2042

அக்டோபர் 2011

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
ஆயுள் கட்டணம்	ரூ. 1000	
புரவலர் கட்டணம்	ரூ. 5000	ரூ. 6000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர்

இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

பொருளடக்கம்

முழங்குகடல் முழவின் முசிறி	வி. நாகசுந்தரம்	4
ஈடில்லாக் குறள்	கவிவேந்தர் கா. வேழவேந்தன்	24
சங்கப் பாடல்கள் உணர்த்தும் சமுதாயப் பழக்க வழக்கங்கள்	முனைவர் அ. ஜம்புலிங்கம்	26
இந்திய தேசிய இயக்கமும் இலக்கிய கொள்கையும்	வை. சந்திரசேகர்	33

இதழ் மணம்

அன்புடையீர்,

செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.

அன்புடையீர்,

அனைவருக்கும் இனிய தீபாவளித் தீபத் திருநாள் வாழ்த்துக்கள். அக்டோபர் மாதச் செந்தமிழ் இதழ் முத்தான மூன்று கட்டுரைகளைத் தாங்கித் தங்கள் கைகளில் தவழ்கிறது. திரு.வி. நாகசுந்தரம் அவர்களின் முழங்குடல் முழவின் முசிறி என்னும் கட்டுரை இம்மாத இதழின் பெரும்பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதை நீங்கள் படித்தறியலாம். அதற்குக் காரணம் வி. நாகசுந்தரம் அவர்களின் கருத்தும் வரலாற்று ஆவணங்களின் கணிப்புமே ஆகும். சங்க காலத்தில் உரோமானியக் காசுகள் கிடைத்த இடங்களைப் பட்டியலிட்டு காசுகளின் படங்களையும் காட்டியிருப்பது அருமையிலும் அருமை. சங்க காலத்துத் துறைமுகப் பட்டினங்கள் எவை யெவையெனக் குறிப்பிட்டு முசிறித்துறைமுகப் பட்டினம் குறித்து முழுமையான செய்தியினைச் சான்றுகளோடு வெளியிட்டு இலக்கிய – வரலாற்று ஆய்வாளர்களுக்கு நல்விருந்து படைத்துள்ளார். இது பற்றிய அவரது ஆய்வுக் கருத்துக்கள் அடுத்த இதழில் நிறைவடையும்.

கவிப்பிரியர்களுக்காகக் கவிவேந்தர் வேழவேந்தன் அவர்களின் ஈடுஇல்லாக்குறள் இடம் பெற்றிருக்கிறது. உள்ளது சிதைப்போர் உளரெனப் படார் என்னும் குறுந்தொகைத் தொடரோடு தாம் தேடிய பொருளைக் கொண்டே தமிழ் மக்கள் இல்லறத்தில் இனிமை கண்டனர் என்று சங்கப் பாடல் உணர்த்தும் சமுதாயப் பழக்க வழக்கங்களை முனைவர் அ. சம்புலிங்கம் நம்மோடு பகிர்ந்து கொள்கிறார். இந்திய தேசிய இயக்கமும், கொள்கையும் என்னும் தலைப்பில் தமிழ் இலக்கியங்கள் எவ்வாறு நாட்டுப்பற்றையும், மொழிப் பற்றையும் இரு கண்களாகக் கொண்டு விடுதலைப் போருக்குத் தொண்டாற்றின என வை. சந்திரசேகர் இம்மாத இதழில் தந்து நம்மை வியக்க வைக்கிறார்.

வாசகர் வாசகத்திற்குத் தங்களின் வனப்பைத் தந்து வாழ்த்தியிருக்கும் புலவர் சி. பாண்டுரங்கன் அவர்களையும், பேராசிரியர் தெ. முருகசாமி அவர்களையும் பாராட்டும் மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தார்.

முனைவர் க. சின்னப்பா

இனி நீங்களும் இதழும்....

முழங்குகடல் முழவின் முசிறி

வி. நாகசுந்தரம்
சென்னை



'முழங்குகடல் முழவின் முசிறி'

மனைக்குவை இய கறிமூடையால்
கலிச் சும்மைய கரை கலக்குந்து
கலந்தந்த பொற் பரிசம்
கழித் தோணியாற் கரை சேர்க்குந்து
....
முழங்கு கடல் முழவின் முசிறி (புறம் 343 : 3-10)

"முழங்கு கடல் முழவின் முசிறி"

1

2

3

4

1 முத்துப்பட்டியின் மலையிலுள்ள சமணர்கள் படுக்கை மற்றும் முசிறி பற்றிய செய்திகள் - தமிழ் பிராமி எழுத்தில். (கி.மு. முதல் நூற்றாண்டு)
2 மற்றும் 3 முசிறியில் அகழ்வாராய்ச்சியில் கிடைத்தவை. காண்க - கட்டுரை!
4 மகாவீரர். (குவிஓவியம்)/முத்துப்பட்டி. (நன்றி: இந்து நாளிதழ்)

"குலந்தந்த பொற்பரிசம்" - பரணர்/புறநானூறு.

"பொன்னொடு வந்து கறியொடு பெயரும்." - அகநானூறு.

- தாயங்கண்ணனார்.

உரோமானியக் காசுகள் - அகஸ்டஸ் காசுகள் (64-66); டைபீரியஸ் காசுகள் (67-68); உரோமானியப் போலிக் காசு (69) முன்பக்கம்-டைபீரியசின் தலை, பின்பக்கம் பார்ச்சுனா அமர்ந்தவாறு. 70. ஜூலியஸ் சீசர்.

அண்ணாநகர் தமிழ்ப் பேரவை

சென்னை - 40

நன்றி : முனைவர் ப. சண்முகம், "சங்ககாலக் காசுகள்."

தமிழ்நாட்டின் உரோமானியக் காசுகள் கிடைத்த இடங்கள் (கொங்கு நாடு மட்டும்)

எண்.	ஊர்	மாவட்டம்	எண்.	முன்னதாக	உரோமானிய அரசர்கள்	காலம்
1.	அகிலாண்டபுரம்	கோயம்புத்தூர்	1936	5	அகஸ்டஸ்/டைபீரியஸ்	கிமு21 - கிபி 37
	ஆனமலை	கோயம்புத்தூர்	1984	1	டைபீரியஸ்.....	கிபி14-37
	கத்தாங்கண்ணி	ஈரோடு	1913	233	அகஸ்டஸ்/டைபீரியஸ்	கிமு31-கிபி37
	கரூர்	கரூர்	1806	5	அகஸ்டஸ்/கிளாடியஸ்	கிமு31-கிபி54
	கரூர்	கரூர்	1856 1986	1+1	அகஸ்டஸ்	கிமு31-கிபி14
	கரூர்	கரூர்	1878 1888	500+?	அகஸ்டஸ்/டைபீரியஸ்	கிமு31-கிபி37
	கரூர்	கரூர்	1884 1891	5	கிளாடியஸ்	கிபி41-கிபி54
	கரூர்	கரூர்	1904 1901	?	மார்கஸ் ஆரேலியஸ்	கிபி161-180
	கல்லகிணர்	கோயம்புத்தூர்	1909	2	காசியஸ்-அகஸ்டஸ்	கிமு55-கிபி14
	கிருஷ்ணகிரி	தருமபுரி	1992	1	நெவினோ பல்புஸ்	கிமு79
	கோனேரிப்பட்டி	சேலம்	1987	35	டைபீரியஸ்	கிபி14-37
	சாவடிப்பாளையம்	கோயம்புத்தூர்	1808	?	அகஸ்டஸ்	கிமு31-கிபி14
	திருப்பூர்	கோயம்புத்தூர்	1990	1	சீசர்	கிமு46
	பிஷப்ஸ்டவுன்	உதகமண்டலம்	1827	1	கிளாடியஸ்?	கிபி41-54
	பூதிநத்தம்	கோயம்புத்தூர்	1946	1398	அகஸ்டஸ்/டைபீரியஸ்	கிமு31-கிபி37
	பெண்ணார்	கோயம்புத்தூர்	1803	1	அகஸ்டஸ்	கிமு31-கிபி14
	பொள்ளாச்சி	கோயம்புத்தூர்	1800	?	அகஸ்டஸ்/கையலீம்	கிமு31-கிபி41
	வெள்ளலூர்	கோயம்புத்தூர்	1841 1891	522(547)	அகஸ்டஸ்/நீரோ	கிமு31-கிபி68
	வெள்ளலூர்	கோயம்புத்தூர்	1932	121	அகஸ்டஸ்	கிமு31-கிபி14
	வெள்ளலூர்	கோயம்புத்தூர்	1939	?	டைபீரியஸ்	கிபி14-37
	?	கோயம்புத்தூர்	1817	1	அகஸ்டஸ்	கிமு31-கிபி14
	?	கோயம்புத்தூர்	1912	2	டைபீரியஸ்	கிபி14-37

(? கேள்விக்குறி இட்டுள்ளவைகட்கு முழுவிபரம் கிடைக்கவில்லை)

முன்னுரை

பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார் தாம் எழுதிய ஸ்ரீ விஜய நாட்டு வரலாற்று நூலின் தோற்றுவாயில் "The more we learn the future goes back the history of eastern navigation and so for as we know the Indian Ocean was the first centre of the oceanic activiy of man" என்று பண்டைத் தமிழர்கள் தான் முதன் முதலில் இந்து மாக் கடலிலும், குகை கடலிலும், குட கடலிலும் கலஞ் செலுத்தியதையும், அவர் தம் கடல் வாணிகத் தொன்மையையும் கூறாமல் கூறியிருத்தலைக் காண்கிறோம். கிரேக்கர், உரோமர், அரபியர், எகிப்தியர் போன்ற பல்வேறு மேலை நாட்டினருடனும், தூர கிழக்கில் ஆஸ்திரேலியாக் கண்டம் வரை தமிழர்கள் கடல் வாணிகம் செய்தமையைப் பல்வேறு சான்றுகள் மூலம் அறிகின்றோம்.

"முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை" (தொல். 980)

என்னும் தொல்காப்பிய நூற்பாவாலும், அரபு நாட்டுக் குதிரையும் ஒட்டகமும் தொல் காப்பியத்திற் குறிக்கப்படுவதாலும், தமிழர் தம் கடல் வணிகத் தொன்மையை உணர்கிறோம்.

"உலகுகிளர்ந் தன்ன உருகெழு வங்கம்
புலவுத் திரைப் பெருங்கடல் நீரிடைப் போழ" (புறம். 255:1-2)

கடலைப் பிளந்து செல்லும் மாபெருங் கப்பல்கள் தமிழகத்தில் செய்யப்பட்டன. கப்பல்கள் தங்கும் துறைமுகத்தைச் சேர்ப்பு, கொண்கு என்று கூறுவது இலக்கிய வழக்கு.

இரவில் வழி தப்பிச் செல்லும் கலங்கட்கு வழிகாட்டுவதற்கு ஒவ்வொரு துறைமுகத்திலும் கலங்கரை விளக்கம் இருந்தது.

"இலங்குநீர் வரைப் பிற் கலங்கரை விளக்கம்" (சிலப். 6.141)

சங்ககாலத் துறைமுகப் பட்டினங்கள்

கீழைக் கடற்கரையில் கொல்லந்துறை, சோபட்டினம் (எயில்பட்டினம்) அரிக்கமேடு, பூம்புகார், தொண்டி, மருங்கூர், கொற்கை, குமரி போன்ற பல்வேறு துறைமுகப் பட்டினங்கள் இருந்த போதிலும் மிகச் சிறப்பாகப் பல்வேறு வரலாற்றுப் பேராசிரியர்கள், வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்புகள், சங்க இலக்கியச் சான்றுகள் என்று பலவாறு புகழப்படுவது பூம்புகார் மட்டுமே ! இதே போன்று மேலைக் கடற்கரையில் மங்களூர், நறவு, தொண்டி, மாந்தை,

முசிறி, நெல்சிண்டா, பலிதா, வைக்கரை, விழிஞம் போன்று பல்வேறு துறைமுகப் பட்டினங்கள் சங்க காலத்திற்கு (கடைச் சங்கம்) முன்பிருந்தே இருந்த போதிலும் முசிறிப் பட்டினம் மட்டுமே மிகச் சிறப்பான முதலிடம் பெறுகின்றது. இதற்குப் பல்வேறு வெளிநாட்டார்க் குறிப்புகள், பெரிப்புளூசு நூல் பல்வேறு சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

பூம்புகார் போற்றுதும், பூம்புகார் போற்றுதும் எனப் பல்வேறு இலக்கியங்களிலும், இலக்கிய இதழ்களிலும் பூம்புகாரைப் பற்றி நாம் படிக்கின்றோம். கீழைத் துறைமுகமான பூம்புகாரைப் பற்றிய செய்திகளை விட, மேலைத் துறைமுகப் பட்டினமான முசிறி பற்றிய செய்திகள் குறைவாகவே உள்ளன. எனவே வளங்கெழு முசிறி என்றும் முழங்கு கடல் முழவின் முசிறி என்று, பல்வேறு சங்க இலக்கியங்களில் புகழப்பட்ட முசிறியைப் பற்றி இக்கட்டுரையில் நாம் காண்போமா?

முழங்கு கடல் முழவின் முசிறி

முசிறித் துறைமுகப் பட்டினம் குறித்த இக்கட்டுரையை மூன்று இயல்களாகப் பகுத்துள்ளோம். முதல் இயலில் முசிறி பற்றிய வெளிநாட்டார் குறிப்புகள், பெரிப்புளூசு நூல் கூறும் செய்திகள் ஆகியவை பேசப்படுகின்றன.

இரண்டாவது இயலில் வளம் கெழு முசிறி என்ற தலைப்பில் சங்க இலக்கியங்கள் கூறும் சான்றுகள், தமிழ்நாட்டிலுள்ள இதர சான்றுகள் குறித்தும் பேசுகின்றோம். கடைசி இயலில் கேரள மாநில அரசு எவ்வளவு முனைப்பாக முழுமையாக முசிறி பற்றிய அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டுள்ளது என்பது கண்டு வியப்படைகின்றோம். மகிழ்ச்சியும் அடைகின்றோம். இது போன்றதொரு ஆராய்ச்சியை இந்திய அரசின் தொல்லியல் துறையோ, மாநில அரசோ இதுவரை பூம்புகார், கொற்கை, குமரி, ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களில் இதுவரை முழுமையாக, முனைப்பாக மேற்கொள்ளவில்லை என்பதை எண்ணும் பொழுது ஒவ்வொரு தமிழனின் நெஞ்சமும் குருதி வடிக்கத்தான் செய்கிறது. இதுபோன்ற ஆராய்ச்சி எப்பொழுது நடைபெறும் என்ற ஏக்கம் எழத்தான் செய்கின்றது.

அ. வெளிநாட்டார் குறிப்புகள்

கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே, மேலை நாட்டிலிருந்து கிரேக்கர்களும், உரோமானியர்களும், பாலிலோனியா நாட்டு கோசியர்களும் மற்றவர்களும் மேலைக் கடலில் கலஞ் செலுத்தித் தமிழ்நாடு

வரலாயினர். எகிப்து நாட்டு வேந்தர்களுக்குக் கீழ் வாழ்ந்த போனீசியர்களே முதற் கண் கடலில் கலஞ் செலுத்தி நாடு காணும் நாட்டம் கொண்டனர். ஆயின் அவர்களது முயற்சி முற்றிலும் வாணிகம் செய்து பொருளீட்டுவதிலேயே கழிந்தமையால் அவர்களது குறிப்புகள் கிடைப்பது அரிதாய் விட்டது. பின்னர் கிரேக்கர்கள் மத்திய தரைக் கடலையும், செங்கடலையும் தாண்டி வந்தனர். வட இந்தியாவின் சிந்து நதி பாயும் நாடு வரை வந்தனர். அவர்களுக்குத் தலைவரான நியார்க்கஸ் (Nearchus) தரை வழியாக சிந்து நதிக்கும் யூபரடீசு, டைகிரிஸ் ஆற்றுக்கும் இடையிலுள்ள நிலப் பகுதியில் வழி கண்டான். அலெக்சாண்டருக்குப் பின் செல்யூகஸ் நிகேட்டார் விடுத்த மெகஸ்தனிஸ் என்பவர், கங்கை நாட்டுப் பாடலிபுத்திரத்தில் சந்திரகுப்த வேந்தனிடம் தங்கித் தாம் அந்நாளில் கேள்வியுற்றுச் செய்திகளைத் தொகுத்து வைத்துள்ளார். அக்குறிப்பினுள் தென் தமிழ்நாட்டு வேந்தர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. அவற்றுள் 'சேர்மா' என்பது சேர வேந்தர்களையும், நறா என்பது சேரநாட்டு வடபகுதியான குடநாட்டு நறவூரையும் குறிக்கும்.

(காண்க : w.woodburn Hyde's Ancient Grade Mariners - P. 209)

அதன் பிறகு எகிப்து நாட்டையாண்ட தாலமிகள் செங்கடல் வழியாக இந்திய நாட்டிற்கு வழி கண்டனர். அவர்களுக்குப் பின்னர் யவனர்கள் (கிரேக்கர்களும், உரோமானியர்களும்) நம் நாட்டுடன் வாணிகம் செய்யத் தலைப்பட்டனர். கி.மு. முதல் நூற்றாண்டில் ஹிப்பலஸ் என்னும் யவன மாலுமி அரபு வாணிகரிடமிருந்து தென் மேற்குப் பருவக் காற்றைப் பற்றி அறிந்து கொண்டு, அக்காற்றின் உதவியால் நடுக் கடலினூடே கப்பலை முசிறிக்கு ஓட்டிக் கொண்டு வந்தான். தென் மேற்குப் பருவக் காற்றின் உதவியை யவணர்கள் அறிவதற்கு முன்பு கப்பல்களைக் கரையோரமாகவே செலுத்திக் கொண்டு வந்தனர். அதனால், நெடுங்காலம் பயணம் செய்ய வேண்டியிருந்தது. இப்பருவக் காற்றின் உதவியால் யவனக் கப்பல்கள் நேராக முசிறித் துறைமுகத்திற்கு விரைவாக, கால தாமதம் இல்லாமல் வரத் தொடங்கின. இந்தப் பருவக் காற்றுக்கு அதைக் கண்டுபிடித்த யவனமாலும் ஹிப்பல்ஸ் பெயரையே சூட்டினார்கள்.

ஆனால், யவனர்கட்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அரபிக கடலில் அரபியரும், இந்தியரும் கலம் செலுத்தி வாணிபம் செய்து வந்தனராதலால் அவர்கள் இப்பருவக் காற்றை அறியாது இருந்தனர் என நினைப்பதற்குச் சிறிதும் இடமில்லை. கி.மு. 6ஆம் நூற்றாண்டில் (கி.மு. 556–

539) ஆட்சி புரிந்த சால்டிய வேந்தன் நபோனிதாசு காலத்திலேயே நமது கடல் வாணிபம் சிறந்து விளங்கியது. கி.மு. 7ஆம் நூற்றாண்டிலேயே இந்திய நாட்டு மேலைக் கடற்கரைக்கும் மேனாட்டுக்கும் இடையே பெரு வாணிகம் நடைபெற்றது. இக்கடற்காற்றின் இயல்பறிந்து பண்டைத் தமிழர் கடலிற் கலஞ்செலுத்திய செய்தியைப் புறநானூற்றுப் பாடல் எண். 66 வெண்ணிக் குயத்தியார் கரிகால் பெருவளத்தானைப் பாடியது மிகச் சிறப்பாக எடுத்தோதுகிறது.

நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளி தொழி லாண்ட வரவோன் மருக (புறம். 66:1-2)

அக்காலத்தில் மேலை நாட்டிற்குத் தென் தமிழ் நாட்டிலிருந்து தூதொன்று சென்று யவன வேந்தனான அகஸ் என்பாரது தொடர்பு கொண்டு ஸ்பெயின் நாட்டிற்குச் சென்றது. இத்தூது தென் பாண்டி நாட்டு வேந்தனொருவன் விடுத்தான் என்பர். இவ்வாறு மேலை நாட்டவர்க்கும் தமிழ் நாட்டவர்க்கும் இடையே வாணிகம் மிகுதியாக நடைபெற்றமையால் யவன நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு வரும் மரக்கல மக்கட்கென யவன நூல்கள் பல எழுந்தன. அவற்றுள் எரித்திரியன் கடல் செலவு, மத்திய தரைக் கடல் செலவு என்ற பெயரில் இரு நூல்கள் தோன்றின. ஒன்று ஆசிய நாட்டுக் கடற் செலவையும், மற்றொன்று ஆப்பிரிக்க நாட்டுக் கடற் செலவையும் பற்றிக் கூறுவன.

(w.woodburn Hyde's Ancient Greek Mariners - P. 209)

இவை கி.மு. முதல் நூற்றாண்டில் தோன்றின என்பர். ஆனால் இதற்கு முன்பே தென் தமிழ் நாட்டவர் சிலர் ஐரோப்பாவைச் சுற்றிச் சென்று வடகடலில் செர்மனி நாட்டருகே அவர்களது கலங்கள் உடைபட்டு அவர்களும் அழிந்தார்கள் என்ற செய்தி அவர்களுடைய நூல்களில் காணப்படுகிறது என்று அறிஞர்கள் கூறுவர். (w.Logan's Malabar - P. 252)

கி.மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த பெட்ரோனியு (Petronius) என்பவர் அந்நாளைய யவன செல்வ மகளிரின் பெருமித வாழ்வைக் கடிந்து நூலொன்றை எழுதியிருக்கிறார். நம் தமிழ் நாட்டின் மேலைக் கடற்கரையிலிருந்து செல்லும் வாணிகப் பொருட்கள் அநேகமாக முசிறித் துறைமுகத்திலிருந்தே சென்றிருக்க வேண்டும். எப்படிக் கீழைக் கடற்கரையின் மிகச்சிறந்த துறைமுகமாக பூம்புகார் விளங்கியதோ, அதே போன்று மேலைக் கரையில் முசிறித் துறைமுகம் சிறந்து விளங்கியது.

அவரது நூலில் அவர் கூறுகின்றார். தமிழ்நாட்டிலிருந்து யவனர்கள் கொண்டு சென்ற மிக அழகிய மெல்லிய ஆடைகளை உடுக்கு மாற்றால் யவன மகளிர் தங்கள் உடல் முற்றும் புறத்தே தெரியுமாறு காட்டிப் பொலிவிழக்கின்றனர் என்றும், அவ்வாடைகள் காற்றாலாகியவை, முகிலால் ஆகியவை, ஆவியால் ஆகியவை என்றும் கூறுகிறார். அவரது கூற்றை உறுதி செய்யும் சங்க இலக்கியச் சான்றுகள் இதோ ! சங்க காலத்தில் நெய்யப்பட்ட ஆடைகள் பாம்புச் சட்டை போன்றும், மூங்கிலின் உட்புறத் தோல் போன்றும், புகை விரித்தாற் போன்றும், நீராவி படர்ந்தாற் போன்றும், இழையோடியது தெரியாமலும் பூத்தொழிலுடன் நுண்ணிய தாய் நெய்யப்பட்டிருந்தன என்றும் பண்டைத் தமிழ் நூல்கள் பகர்கின்றன.

"புகை முகந் தன்ன மாசில்தூ உடை" (திருமுருகு - 138)

"நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து (பொருந. 82-83)
அரவுரியன்ன அறுவை"

"பாம்புரியன்ன வடிவிள காம்பின் (புறம் 383 : 9 ப.)
கழைபடு சொலியின் இழையணி வாரா
ஒண்பூங் கலிங்கம்"

"காம்பு சொலித் தன்ன அறுவை" (சிறுபாண் : 236)

"புகை விரிந்தன்ன பொங்கு துகில்
ஆவி யன்ன அவிர் நூற்கலிங்கம்" (பெரும்பாண் : 469)

"இழைமருங்கறியா நுழைநூற்கலிங்கம்" (மலைபடு 561)

"நீலக் கச்சைப் பூவாராடை" (புறம் 274)

"போதுவிரி பகன்றைப் புதுமலரன்ன (புறம் 393)
அகன்று மடி கலிங்கம்"

"திருமலரன்ன புதுமடிக் கொளீஇ" (புறம் 390)

இன்றைய காஞ்சிபுரப்பட்டுச் சேலை போன்றே. அக்காலப் பட்டாடையும் முன்றனை யோரத்தில் அழகிய மணி போன்று நூல் முடிச்சுகளையுடையதாய் இருந்தது.

"கொட்டைக் கரைய பட்டுடை நல்கி" (பொருந 155)

அக்காலத்தில் பட்டு, பஞ்சு, விலங்கு மயிர் ஆகிய மூவகைக் கருவியாலும் ஆடை நெய்து வந்தனர்.

"நூலினு மயிரினும் நுழை நூற் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூறடுக்கத்து
நறுமடி செறிந்த அறுவை வீதியும்"

என்னும் சிலப்பதிகார அடிகளால் இதனை யறியலாம். மயிரினும் என்பதற்கு எலிமயிரினாலும் என்று உரை யாத்துள்ளார் அடியார்க்கு நல்லார் ! மயிர் நிறைந்த ஒரு வகை மலை எலி பண்டைத் தமிழ் நாட்டில் இருந்த தென்பதும், அதன் மயிரால் சிறந்த தாவணி (கம்பளம்) நெய்யப்பட்டது என்பதும்,

"புகழ்வரைச் சென்னிமேற் பூசையிற் பெரியன
பவழமே யனையன பன்மயிர்ப் பேரெலி"

என்று சீவக சிந்தாமணி (1898) கூறுவதாலும் அறியலாம். எலிமயிரால் மட்டுமின்றி ஆட்டு மயிராலும் ஆடைகள் நெய்யப்பட்டன என்பதை

"எலிப்பூம் போர்வையொடு மயிர் படம்க விரித்து" (உஞ்சை 47 : 179)

என்னும் பெருங் கதையடியால் அறிகிறோம்.

கி.பி. 126-161ல் வாழ்ந்த தாலமி என்பவர் (Ptolemy) எழுதியுள்ள குறிப்பில் சேரவேந்தர்களைக் கேரள போத்திராசு (Carela bothras) என்றும், அவர்களது தலைநகர் 'கரவ்ரா' (Karoura) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 'கரவ்ரா' என்பது 'கருவூர்' என்பதன் திரிபே!

பெண்கள் அழகு செய்வதற்காக வாசனைத் திரவியங்களைத் தமிழ் நாட்டிலிருந்து இறக்குமதி செய்வதால் உரோம நாட்டின் செல்வம் வீணாகச் செலவானதாக 'தஸ்தஸ்' என்னும் மேல் நாட்டு ஆசிரியர் குறிப்பிடுகின்றார்!

'சேப்பு' என்பவர் தமிழ்நாட்டு வியாபாரிகள் மிளகு வியாபாரத்தால் ஈட்டும் பொருள் செல்வத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். மேலும், அவர், கீழ் நாடுகளிலிருந்து அளவுக்கு மிஞ்சிய சுகபோகப் பொருட்களை இறக்குமதி செய்தமையால் உரோம் நாட்டு நாணயம் மதிப்பிழந்ததாகக் கூறுகின்றார்!

கி.பி. 226 அளவில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் பியூ திங்கர் நூல் (Peutingar Table) முசிறியில் யவனர் இருக்கை யொன்று இருந்தது எனவும் அங்கே அகஸ்டசுக்குக் கோயில் ஒன்று இருந்ததாகவும், அதனை

யவனப்படை இரண்டு இருந்து காத்து வந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. ஆயினும், முசிறியைக் குறிக்கும் சங்கப் பாடல்களில் இது பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. எனவே, சங்க நூல்கள் தொகுக்கப்பட்ட பிறகே இக்கோயில் தோன்றி இருக்கலாம் என்ற முடிவிற்கு வர வேண்டியுள்ளது.

உரோமானியக் காசுகள்

உரோமானிய வரலாற்றாசிரியர்கள் பல்வேறு பயணக் குறிப்புகள், பெரிப்புளுசு நூல், பியூ திங்கர் நூல் மற்றும் சங்க இலக்கியங்கள் கூறுவதற்கேற்ப, தமிழ் நாட்டில் கடந்த 200 ஆண்டுகளாக உரோமானியக் காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான காசுகள் புதையல்களாகக் கிடைத்தவை. இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் தான் அதிகப் புதையல்களும், அதிகமான எண்ணிக்கையில் காசுகளும் கிடைத்துள்ளன. களமேற்பரப்பு ஆய்வுகளிலும் காசுகள் கிடைத்துள்ளன. இக்காசுப் புதையல்கள் பெரும்பாலும் கொங்கு நாட்டுப் பகுதியில் தான் அதிகமாகக் கிடைத்துள்ளன. கோயம்புத்தூர், ஈரோடு, கரூர், சேலம், தருமபுரி மாவட்டங்களில் இவைகள் கிடைத்துள்ளன. (காண்க : தனி அட்டவணை) மற்றும் அண்மைக் காலங்களில் சொறையப்பட்டு, உத்தமபுரம், திருப்பூர், மதுரை, திருநெல்வேலி, கடலூர், திண்டுக்கல், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிலும் உரோமானியக் காசுப் புதையல்கள் கிடைத்துள்ளன. ஒரே புதையலில், மிக அதிகமாக 1398 காசுகள் கோயம்புத்தூர் மாவட்டம் பூமி நத்தம் என்ற ஊரில் கிடைத்துள்ளது. மேலே கூறப்பட்ட பல்வேறு செய்திகளிலிருந்து யவனர்கள் தமிழ்நாட்டுடன் எந்த அளவிற்கு வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதை நாம் மிக எளிதாக ஊகிக்கலாம்.

வெளிநாட்டார் குறிப்புகள் என்ற முதல் இயல் முடிக்கு முன்பாக முசிறித் துறைமுகம் பற்றிப் பெரிப்புளுசு நூலாசிரியர் கூறும் செய்தியைக் காண்போமா?

"முசிறித் துறைமுகப்பட்டினம் செல்வத்தால் சிறப்புடைய மாநகரம் என்றும், வட நாடுகளிலிருந்தும், எகிப்து முதலிய நாடுகளிலிருந்தும் எப்பொழுதும் கலங்கள் இத்துறைமுகத்திற்கு வருவதும், போவதுமாக உள்ளன" என்றும் கூறுகின்றார்!

சரி! இனி, முசிறித் துறைமுகம் பற்றி............

ஆ. வளம் கெழு முசிறி

"முழங்கு கடல் முழவின் முசிறி" என்று கடைச் சங்கப் புலவர் பரணராலும் (புறம் 343) "வளங்கெழு முசிறி" என்று எருக்காட்டூர்த் தாயங் கண்ணனாராலும் (அகம் 149) "முதுநீர்முன் துறை முசிறி" என்று நக்கீரனாராலும் (அகம் 57) புகழப்பெற்ற முசிறித் துறைமுகப்பட்டினம், பண்டைத் தமிழ்நாட்டின் கீழைக் கரையில் எவ்வாறு பூம்புகார் பெரும் பெயர் பெற்று, மிகச் சிறப்பானதோர் துறைமுகமாக விளங்கியதோ, அதேபோன்று, மேலைக் கரையில் குட கடலில் முசிறித் துறைமுகப் பட்டினமும் சிறப்புற்றுத் திகழ்ந்தது.

இக்கட்டுரையின் முதல் இயலில் வெளிநாட்டு வரலாற்றாசிரியர்கள், பயணிகளின் குறிப்புகள், ஆசிரியர் பெயர் தெரியாத, பெரிப்புளுசு நூலின் செய்திகள் ஆகியவற்றைக் கண்டோம். இரண்டாவதாக, இந்த இயலில் 'வளம் கெழு முசிறி' என்ற தலைப்பில் முசிறித் துறைமுகத்தைப் பற்றிய பல்வேறு செய்திகளைக் காண்போம்.

இதோ ! ஆர்ப்பரிக்கும் அலைகளைக் கொண்ட மேலைக் கடலில் சுள்ளியம் பேரியாறு கடலில் கலக்கும், 'புகர்முகம்' – முசிறித் துறைமுகப்பட்டினம். துறைமுகத்தில் எங்கு நோக்கினும் திமில், அம்பி, தோணி என்று கூறப்படும் சிறிய மீன் பிடிப் படகுகளும், நாவாய், வங்கம், கலம், பஃறி என்று கூறப்படும் பண்டங்களை ஏற்றிச் செல்லும் பெரிய கப்பல்களும் நமது கண்களுக்கு – அகக் கண்களுக்கு – அரியதோர் விருந்தளிக்கின்றன. இன்று வழக்கிலுள்ள படகு, கட்டுமரம் ஆகிய சொற்கள் கலங்களைக் குறிக்கும் சொற்கள். சங்க இலக்கியங்களில் காணப்பட மாட்டா ! கலங்களைக் குறிப்பதற்கு மரம் என்ற சொல் மட்டும் இலக்கியங்களில் ஓரிரு இடங்களில் வருவதுண்டு!

அதோ ! வெளிநாட்டுக் கலங்கம் – கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து, அரேபியா போன்ற பல்வேறு நாடுகளிலிருந்து வந்துள்ள கலங்கள் – நாவாய்கள், நடுக்கடலில் நங்கூரமிட்டு நின்று கொண்டிருக்கின்றன. அக்கலங்கள் பார்ப்பதற்கு யானைப் பந்தியில், யானைகள் அசைந்தாடுவது போன்று உள்ளன. கலங்களின் பாய்மரத்தின் உச்சியில் அந்தந்த நாட்டுக் கொடிகள் பறந்து கொண்டிருப்பது அக்கலங்களுக்கு அப்பாலுள்ள கலங்களை முசிறித் துறைக்கு வருக, வருக வென அழைப்பது போலல்லவா இருக்கிறது?

"பெரிப்புளுசு" நூலாசிரியர் "முசிறி" யைப் பற்றிக் கூறுவது போன்று வடநாடுகளிலிருந்தும், எகிப்து முதலிய மேலை நாடுகளிலிருந்தும் கலங்கள் எப்பொழுதும் வந்த வண்ணமே உள்ளன. அதேபோன்று இங்கிருந்து ஏற்றுமதிப் பொருட்களை ஏற்றுக் கொண்டு பல்வேறு கலங்கள் முசிறியை விட்டுச் சென்ற வண்ணமே உள்ளன.

மேலை நாடுகளிலிருந்து இறக்குமதி ஆகும் பொருட்கள் - அஞ்சனக்கல், ஈயம், பித்தளை, தகரம், தாளகம், பவழம், கண்ணாடி, செம்பு, கோதுமை, தேறல், மதுக் கோப்பைகள், பாவை விளக்குகள், ஓதிம விளக்குகள் போன்றவைகளும், தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதியான பொருட்களில் மிளகு, முத்து, தந்தம், நவரத்தினக் கற்கள், பொன்னால் செய்யப்பட்ட ஆபரணங்கள், நறுமணப் பொருட்கள், தேக்கு மரம், இஞ்சிவேர், நீலக்கல், துகில், கவி, தோகை, அகில் போன்றவைகள் முதன்மையானவை!

இதோ! **"இலங்கு நீர் வரைப்பில் கலங்கரை விளக்கம்!"**

கடலில் செல்கின்ற கலங்கள் இராக் காலத்தில் துறைமுகம் உள்ள இடத்தை அறிந்து கரை சேர்வதற்காகக் கலங்கரை விளக்குகள் துறைமுகங்களில் அமைப்பது வழக்கம். கலங்கரை விளக்கு உள்ள கட்டம் எவ்வளவு உயரமானது? அது சாந்து பூசப்பட்டுத் தள வரிசையுள்ளதாகவும், அதன் உச்சியில் இராக் காலத்தில் தீயிட்டு எரிப்பதற்கு ஏதுவாக ஏணிப்படிகள் இருந்தன.

"வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்திய வேற்றருஞ் சென்னி
விண் பொர நிவந்த வேயா மடத்து
இரவின் மாட்டிய இலங்கு சுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஒரு கலம் கரையும் துறை"

(பெரும்பாண் 346-350)

சங்க இலக்கியங்கள் வரலாற்று ஆவணங்களே!

முசிறித் துறைமுகம் குறித்துப் "பிளைனி" பின்வருமாறு கூறுகின்றார்!

எகிப்து நாட்டு ஒசெலிசு (Ocelis) துறையினின்று புறப்படும் கலம் தென்மேற்குப் பருவக் காற்றைத் துணை கொண்டு நாற்பது நாள்களில் முசிறித் துறையை அடையும்; அத்துறையில் கடற் கொள்ளைக் கூட்டத்தினர்

உள்ளனர். அவர்கள் நித்திரியாசு (Nitrias) என்ற இடத்தில் உறைபவர்கள். முசிறித்துறை வணிகப் பொருள் மிகுதியாக உடையதன்று; கலம் நிற்கும் இடத்திற்கும், முசிறித்துறைக்கும் இடையே நெடுந்தூரம் உள்ளது. ஏற்றற்குரிய பொருளைச் சிறு சிறு படகுகளில் கொணர வேண்டும். இப்பகுதிக்குரிய வேந்தன் கேளோ போத்தி ராசு (Caclobothras) இம் முசிறித் துறையினும் நியாசிந்தி (Neacyndi) நாட்டிலுள்ள பாரேசுத் துறை (Barace) சிறந்து விளங்குகிறது. அதற்குரிய வேந்தரான பாண்டியோன் (Pandion) உள் நாட்டில் மதுரை (Madora) என்னும் நகர் கண் இருக்கிறான். பாரேசுத் துறைக்குக் கோட்ட நாராவிலிருந்து மிளகுப் பொதிகள் வருகின்றன.

சங்க இலக்கியங்கள் வரலாற்று ஆவணங்கள் தாம் என்பதற்கு, இந்த ஒரு சங்கப் பாடல் மட்டுமே சான்று பகரும் ! முசிறித் துறைமுகம் குறித்த ஆசிரியர் பிளைனியின் கூற்றை அவ்வாறே வழி மொழிகிறார் ஆசிரிய பரணர். பிளைனி, பரணர் இருவரில் யார் காலத்தால் முற்பட்டவர் என்பது ஆய்வுக்குரிய ஒன்று ! இதோ ! பரணர் பாடிய புறநானூற்றுப் பாடல் !

"மனைக்குவை இய கறிமூடையால்
கலிச் சும்மைய கரைக் கலக் குந்து
கலம் தந்த பொற்பரிசம்
கழித் தோணியாற் கரை சேர்க்குந்து
மலைத் தாரமும் கடல் தாரமும்
தலைப் பெய்து வருநர்க்கு ஈயும்
புனலங்கள்ளின் பொலந்தார்க்குட்டுவன்
முழங்கு கடல் முழவின் முசிறி" (புறம் 343 : 3-10)

முசிறித் துறைமுகம் ஆழமில்லாமல் இருந்தபடியால், யவனர்களின் பெரிய மரக் கலங்கள் கரைக்கு வர முடியாத தாகையால், கடலில் தூரத்திலேயே நின்றன. ஆகவே, தோணிகளில் மிளகை ஏற்றிக் கொண்டு போய், யவனர்களின் மரக்கலங்களில் ஏற்றிவிட்டு, அதற்குப் பதிலாகப் பொன்னைப் பெற்றுக் கொண்டு கரைக்குத் திரும்பினர். பிளைனி, பரணர் ஆகிய இருவரது கருத்துகளும் எவ்வளவு சிறப்பாகப் பொருந்துகின்றன, பாருங்கள் !

முசிறியும் பூம்புகாரும்

சங்க காலத்தில் மிகவும் புகழ் பெற்ற இரு பெரும் துறைமுகப் பட்டினங்களில் ஒன்றான முசிறிப் பட்டினத்தில் கடல் கலங்கள் வந்து

தங்குவதற்கு ஆழமில்லாது இருந்தபடியால் கலங்கள் நடுக்கடலிலேயே நிற்க, சிறிய தோணிகள் மூலமாக ஏற்றுமதி செய்ய வேண்டிய பொருட்களை ஏற்றிச் சென்று கலங்களில் ஏற்றினார்கள். அதே போன்று கலங்களிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களையும் சிறிய சிறிய தோணிகளில் ஏற்றிச் சென்று கரை சேர்த்தார்கள். இதுபற்றிப் பிளைனி மற்றும் சங்கப் புலவர் பரணர் பெருமான் கூற்றையும் கண்டோம். ஆனால், கீழைக் கடல் துறைமுகப் பட்டினமான பூம்புகார் இதற்கு நேர்மாறானது. காவிரியாற்றின் முகத்துவாரம் ஆழமாகவும், அகலமாகவும், பல கலங்கள் வந்து தங்குவதற்கு ஏற்றதாக இருந்தது. வணிகக் கப்பல்கள் பாய்களைச் சுருட்டாமலும், பாரத்தைக் கழிக்காமலும் நேராகக் கடலிலிருந்து ஆற்றினுள் புகுந்து, துறைமுகத்தை அடைந்தன.

இதோ ! உறையூர் முதுகண்ணன் சாத்தனார் சோழன் நலங்கிள்ளியைப் பாடுகின்றார் பாருங்கள் !

"கூம்பொடு
மீப்பாய் களையாது மிசைப் பரந் தோண்டாது
புகா அர்ப் புகுந்த பெருங்கலம் தகாஅர்
இடைப்புலப் பெருவழிச் சொரியுங்
கடற்பல தாரத்த நாடு கிழவோயே " (புறம் 30:10-14)

புகார் துறைமுகத்தில் வந்து தங்கிய கலங்கள் யானைப் பந்தியில் நிற்கும் யானைகள் அசைந்து கொண்டு நிற்பன போல் அசைந்து கொண்டிருந்தன. பாய்மரத்தின் மீது கொடிகள் பறந்தன.

"வெளில் இளக்கும் களிறு போலத்
தீம் புகார்த் திரை முன் துறைத்
தூங்கு நாவாய் துவன்றிருக்கை
மிசைக் கூம்பின் நசைக் கொடி" (பட். பாலை 172-175)

காடு கொன்று நாடாக்கி குளந்தொட்டு வளம் பெருக்கிய சோழவந்தான் கரிகாற் பெரு வளத் தானை கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது.

யவனர்களின் கலங்கள் பவழம், கண்ணாடி, தேறல் முதலிய பொருட்களைக் கொண்டு வந்து முசிறியில் இறக்குமதி செய்துவிட்டு, இங்கிருந்து பல்வேறு பொருட்களை ஏற்றுமதி செய்து கொண்டு போயின. ஏற்றுமதியான பொருள்களில் மிக முக்கியமானதும், அளவில் அதிகமாக

இருந்ததும் மிளகுதான். யவனர்கள் மிளகை ஏராளமாக ஏற்றுமதி செய்து கொண்டு போனார்கள். யவனர்கள் மிளகை விரும்பி வாங்கியதால் அதற்கு "யவனப்பிரியா" என்ற பெயர் உண்டாயிற்று. பெரிய யவனக் கலங்கள் பொன்னைக் கொண்டுவந்து விலையாகக் கொடுத்து, அதற்குப் பதிலாக மிளகை வாங்கிச் சென்றார்கள். சங்கப் புலவர்கள் தாங்கள் பாடும் அகத்துறைப பாடல்களில் கூட எவ்வளவு அழகாக வரலாற்றுச் செய்திகளைக் குழைத்துத் தருகிறார்கள் பாருங்கள்!

எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார் பாடுகிறார்..

"சுள்ளியம் பேர் யாற்று வெண்நுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன் னொடு வந்து கறியொடு பெயரும்
வளங் கெழு முசிறி" (அகம். 149)

கிரேக்கரும், உரோமரும் மட்டும் மிளகை வாங்கவில்லை. அக்காலத்தில் உலகிலுள்ள எல்லா மக்களும் மிளகை வாங்கினார்கள். அக்காலத்தில் மிளகாய் கிடைக்காத படியால், அனைவரும் மிளகைப் பயன்படுத்தினார்கள்.

முசிறித் துறைமுகத்திலிருந்து மிளகு கொண்டு போகப்பட்டதால், மிளகுக்கு 'மரிசி' எனப் பெயர் உண்டாயிற்று. 'முசிறி' பட்டினத்தின் பெயர் தான் 'மரிசி' என மருவிற்று. சேர நாடெங்கும் கறி பயிர் செய்யப்பட்ட தென்பதைப் பல்வேறு சங்க இலக்கியங்களிலிருந்து அறிகிறோம்.

பைங்கறி நிவந்த பலவின் நீழல்	சிறுபாணா 43
கறிவளர் சாந்தம்	அகம் 2-6
கறிவளர் அடுக்கம்	குறுந் 288-1
கறிவளர் அடுக்கம்	புறம் 168.2
கறிவளர் சிலம்பை	அகம் 112.14
துறுகல் நண்ணிய கறியிவர் படப்பை	அகம் 272-10

இவ்வாறு சேர நாடு முழுவதும் மிளகு பயிர் செய்யப்பட்டதைப் பல்வேறு சங்க இலக்கியங்கள் மூலம் அறிகின்றோம்.

முசிறித் துறையிலிருந்து ஏற்றுமதியான பொருள்களில் மிளகிற்கு அடுத்தபடியாகக் கூறத்தக்கவை முத்து, நீலக்கல் மற்றும் பொன் நகைகள் போன்றவை.

முசிறிக் கடலில் முத்துச் சிப்பிகளும் உண்டாயின. சிப்பியிலிருந்து முத்து கிடைத்தது. முசிறியில் உண்டான முத்துக்களைச் சாணக்கியரின் அர்த்த சாத்திரம் 'கௌர்ணெயம்' என்கிறது. பேரியாற்றுக்குச் சூர்ணியாறு என்றும் பெயருண்டு. சூர்ணியாற்றின் முகத்துவாரத்தில் உண்டானபடியால் 'கௌர்ணெயம்' எனப்பட்டது. முசிறிக் கடலில் உண்டான முத்துக்கள் முசிறிப் பட்டினத்தின் ஒரு பகுதியான பந்தரிலும், கொடுமணம் என்னும் இடத்தில் பொன் நகைகளும் விற்கப்பட்டன. பந்தர் என்ற அரபுச் சொல்லிற்கு ஆவணம், கடைவீதி என்பது பொருள். சங்க காலத்திலேயே அரபியர் தமிழ்நாடு வந்த வாணிகம் செய்தமையால் அரபு மொழிச் சொல் தமிழில் புகுந்தது.

துஞ்சும் பந்தர்

"இன்னிசைப் புணரி இரங்கும் பௌவத்து
நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்க்
கமழும் தாழைக் கானலம் பெருந்துறை"

இனிமையான ஓசையை உடைய அலைகள் ஒலிக்கின்ற கடல் வழியாய் வந்த நல்ல அணிகலன்களாகிய செல்வம் சேர்த்து வைக்கப் பட்டிருக்கும் பந்தர் (பண்ட சாலை) உள்ள மணம் கமழும் சோலைகள் உள்ள முசிறித் துறையையுடைய நல்ல நாட்டுத் தலைவனே என்று ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை காக்கைப் பாடினியார், நச்செள்ளையார் பாடுகின்றார்.

(பதிற்றுப் பத்து 6-5 : 3-5)

"கொடுமணம் பட்ட நெடுமொழி யொக்கலொடு
பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்க்
கடனறி மரபிற் கைவேல் பாண
தென்கடல் முத்தமொடு நன்கலம் பெறுகுவை"

இசை வல்லார்க்கு உரிய கடமைகளை நன்கு அறிந்த முறைமையால் யாழ் வாசித்தலில் வல்லமையுடைய பாணனே, நின் சுற்றுத்தாருடன் கொடுமணம் மற்றும் பந்தர் என்ற பெய்ரையுடைய புகழ் பெற்ற ஊரிடத்தும் (முசிறி) தெற்குக் கடலில் எடுக்கப்படும் நல்முத்துடன் நல்ல அணிகளையும் பெறுவாய் என்று கபிலர் பாடுகின்றார். சேரவேந்தன் செல்வக் கடுங்கோ வாழியாதனை !

(பதிற்றுப்பத்து 7.7 : 1-4)

இதே கருத்தைப் பெய்து ஆசிரியர் அரிசில்கிழார் தகடூரெறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையை வாழ்த்துகின்றார்.

"கொடுமணம் பட்ட வினை மாண் அருங்கலம்
பந்தர்ப் பயந்த பலர் புகழ் முத்தம்" (பதிற்றுபத்து 8-4 : 5-6)

தண்கமழ் தேறல்

"யவனர் நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
பொன் செய் புனை கலத்தேந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்
தாங்கினி தொழுகுமதி யோங்கு வாண்மாற" (புறம் 56-18-21)

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை மதுரைக் கணக்காயர் மகனார் நக்கீரனார் பாடியது.

"யவனர்களால் நல்ல மதுக்குப்பியில் கொண்டு வரப்பட்ட குளிர்ந்த நறு நாற்றத்தையுடைய தேறலை, பொன்னால் செய்யப்பட்ட புனைந்த கலத்தின் கண் ஏந்தி நாடொறும் ஒள்ளிய வளையையுடைய மகளிர் ஊட்ட, மகிழ்ச்சி மிக்கு இனிதாக நடப்பாயாக," என வாழ்த்துகிறார்.

நளியிரு முந்நீர் நாவாயோட்டி

"நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளி தொழிலாண்ட வுரவோன் மருக
களியியல் யானைக் கரிகால் வளவ" (புறம் 66 : 1-3)

கடலில் இயங்கும் காற்றைக் கலஞ் செலுத்துவதற்கு ஏதுவாகப் பயன்படுத்திக் கொண்ட பண்டைத் தமிழரின் திறனை வியக்கின்றார் புலவர் வெண்ணிக் குயத்தியார். யவனர்க்கும், அரபியர்க்கும் முன்பே முந்நீரில் நாவாய் ஓட்டியவர்கள் தமிழர்கள் என்பதை வெண்ணிக் குயத்தியார் இப்புறப்பட்டால் திறம்பட விளக்குகின்றார்.

முசிறித் துறைமுகம் பற்றிய இவ் வாய்வுக் கட்டுரையில், தன் கமழ்தேறல், 'வினைமான் பாவை', 'ஓதிம விளக்கு' போன்றவற்றைப் பற்றிப் பேசுவதற்குக் காரணம், இப்பொருட்கள் யாவும் யவனர் தம் நன்கலங்களில் வந்து, முசிறித் துறைமுகப்பட்டினம் வழியாகப் பண்டைத் தமிழ்நாட்டின் இதர நாடுகளுக்கும், பிற பகுதிகளுக்கும் சென்றன என்பதால் தான்!

வினைமாண்பாவை / ஓதிம விளக்கு !

"யவனர் இயற்றிய வினை மாண்பாவை
கையேந் தையகல் நிறைய நெய் சொரிந்து
பருஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிர் எரி"

(நெடுநல் 101-103)

யவனர்களால் பண்ணப்பட்ட தொழில் மாண்புடைய பாவை தன் கையில் ஏந்தியிருக்கினற வியப்பையுடைய தகளி நிறையும்படி நெய் பெய்யப்பட்டு, பெரிய திரிகளைப் பந்தங்களில் கொளுத்தி வைத்த நிறமுடைய தலையினையுடைய மேனோக்கி எரிகின்ற விளக்கு (பாவை விளக்கு)

"பாவை விளக்கிற் பருஉச் சுடர் அழல் -" (முல்லைப் பாட்டு 85)

"வேண்டிடந் தோறும் தூண்டு திரிக் கொளீஇ
கைவயிற் கொண்ட நெய்ய கற் சொரியும்
யவனப் பாவை அணி விளக் கழல்" (பெருங்கதை)

கடியலூர் உருத்திரங்கண்ணனாரும் யவனர் ஓதிம விளக்கைப் பற்றிக் கூறுகிறார். 'ஓதிம விளக்கு' அன்னப் பறவையின் உருவம் போன்றது. மணிச்சிரல் (மீன் கொத்திப் பறவை) வேள்வித்தூண்கள் மேல் அமர்ந்திருப்பது யவனருடைய ஓதிம விளக்கு போல் இருந்தது என்கிறார்.

(பெரும்பாணாற்றுப் படை 311-318)

முதுநீர் முன்றுறை முசிறி முற்றி

"கொய்சுவற் புரவிக் கொடித் தேர்ச் செழியன்
முதுநீர் முன்றுறை முசிறி முற்றி" (அகம் 57 : 14-15)

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது.

கொய்த பிடரி மயிரினை உடைய குதிரைகளையுடைய, கொடி கட்டிய தேரினையுடைய பாண்டிய வேந்தன், பகைவர்களின் யானைகளை வீழ்த்தி, பழமையான கடலின் துறைமுகத்தையுடைய முசிறியைக் கைப்பற்றினான். இப்பாடல் அகப்பாடலேயாயினும் (அகம் 57 - பாலை) வரலாற்றுச் செய்திகளையும் குழைத்துத் தருவதில் பண்டைத் தமிழ்ப் புலவர்கள் வல்லவர்கள் என்பதற்கு இப்பாடல் ஒரு சான்று !

நீலக்கல் (அக்வா மரினா)

பேராசிரியர் முனைவர் ப. சண்முகம் அவர்கள் தனது "சங்க காலக் காசு இயல்" என்ற நூலில் கீழ்க்கண்டவாறு கூறுகின்றார்.

கடந்த 200 ஆண்டுகளாக உரோமானியக் காசுகள் தமிழகத்தின் பல ஊர்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான காசுகள் புதையல்களாகக் கிடைத்தவை. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் அதிகப் புதையல்களும், அதிக எண்ணிக்கையில் உரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன. கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பொள்ளாச்சியில் 1800ஆம் ஆண்டு முதல் முதலாகக் காசுப் புதையல் கண்டெடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கோயம்புத்தூர், கரூர், உதகமண்டலம், திண்டுக்கல், மதுரை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உரோமானியக் காசுப் புதையல்கள் கண்டெடுக்கப்பட்டன. 20ஆம் நூற்றாண்டில் ஏறக்குறைய 20 இடங்களில் உரோமானியக் காசுப் புதையல்கள் கண்டெடுக்கப்பட்டன. இக்காசுப் புதையல்கள் பெரும்பாலும் கொங்கு நாட்டுப் பகுதியில் தான் (கோயம்புத்தூர், ஈரோடு, கரூர், சேலம், தருமபுரி மாவட்டங்கள்) அதிகமாகக் கிடைத்துள்ளன. இப்பகுதியில் மட்டும் உரோமானியக் காசுகள் அதிகமாகக் கிடைக்கக் காரணம் என்ன? காரணம் காண்போம்!

சேர நாட்டில் குட்ட நாட்டிற்கும், குட நாட்டிற்கும் சற்று மேலே இருக்கும் நாடு கொங்கு நாடு. கொங்கு நாட்டில் சங்க காலத்தில் விலையுயர்ந்த மணிக் கற்கள் கிடைத்தன. சங்க இலக்கியங்களில் இந்த மணிக்கற்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. சேர வேந்தன் செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பாடும் கபிலர் கொங்கு நாட்டில் கதிர்மணிகள் கிடைக்கும் செய்தியையும் இணைத்துத் தருகிறார்.

"இலங்கு கதிர்த் திருமணி பெறூஉம்
அகன் கண் வைப்பின் நாடு" (பதிற்றுப்பத்து 7-5 : 19-20)

தகடூ ரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறையை ஆசிரியர் அரிசில் கிழார் பாடுகின்றார். உழவர்கள் ஏர் உழுத பொழுது கதிர்த் திருமணிகள் வெளிப்பட்டன என்கிறார்.

"கருவி வானந் தண்டளி சொரிந்தெனப்
பல்விதை யுழவின் சில்லே ராளர்
பனித்துறைப் பகன்றைப் பாங்குடைத் தெரியல்"

"கழுவுறு கலிங்கம் கடுப்பச் சூடி
இலங்கு கதிர்த் திருமணி பெறூஉம்
அகன் கண் வைப்பின் நாடு" (பதிற்றுப்பத்து 8-6 : 10-15)

கொங்கு நாடு சங்க காலத்தில் வடக்கே மைசூர் வரை பரவியிருந்தது. வட கொங்கு நாட்டில் 'புன்னாடு' என்னும் இடத்தில் அக்காலத்தில் கோமேதகச் சுரங்கம் இருந்தது.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

ஈடில்லாக் குறள்

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

'குறள்நெறி' பரவு மானால்
குற்றங்கள் மண்ணில் ஏது?
'குறள்மணம்' நிறையு மானால்
குடும்பத்தில் சிக்கல் ஏது?
'குறள் அறம்' பெருகு மானால்
கோலாட்சி ஊழல் ஏது?
'குறள்வழி' தழைக்கு மானால்
குடிப்புகழ் தாழ்தல் ஏது?

எழுகதிர் விழித்தால், சூழும்
இருளாட்சி மாயும் ! எங்கும்
உழுபடை நிறைந்தால், வாட்டும்
உறுபசி ஓயும் ! காக்கும்
மழைமுகில் எழுந்தால், வாடும்
வயலெலாம் சிரிக்கும் ! மண்மேல்
விழுமிய குறள்செ ழித்தால்
மேன்மைகள் குவியு மன்றோ?

தன்வாழ்க்கை, தன்கு டும்பம்,
தன்மதம், தொழிலைப் பற்றித்
தன்நூலில் செந்நாப் போதார்
தவறியும் குறித்திட் டாரா?

எந்நாட்டுக் குடிக ளுக்கும்,
எக்கால மாந்த ருக்கும்,
எந்நாளும் பொருந்தும் வண்ணம்
இயற்றினார் பொதுநூல் அன்றோ?

சொல்லாட்சி அழகா? சொல்லும்
சுவைத்திட்பம் அழகா? ஓரி
வில்லம்பாய் நெஞ்சில் தைக்கும்
விரிபொருள் அழகா? நின்று
பல்வகை உவமை காட்டும்
பக்குவம் அழகா? கூற
எல்லையும் உண்டா? வேறோர்
இணைநூலும் குறளுக் குண்டா?

வாசகர் வாசகம் (1)

அன்பார்ந்த செந்தமிழ் ஆசிரியர் பெருந்தகையீர்,

வணக்கம். ஆகஸ்ட் 2011–இல் வெளிவந்த செந்தமிழ் இதழில் பேரா. திரு. மூர்த்தி எழுதியுள்ள பேரா. ம.ரா.போ. குருசாமியின் குருமுகம் எனும் நூல் பற்றிய விரிந்த கட்டுரை எங்களுக்கு முந்தைய தமிழ்ப் பேராசிரியப் பெருமக்களின் கொள்கைப் பிடிப்பையும், நேர்மைத் திறத்தையும், தமிழ் உணர்வின் ஆழத்தையும் அறிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக அமைந்தது. பேரா. ம.ரா.போ. வின் வாழ்வியல் தடத்தில் தமிழக வரலாற்றுப் பதிவு எவ்வளவு ஆழமாகப் பதிந்திருந்தது என்பதனை அறிந்து மகிழ்ந்தேன்.

'குருமுகம்' நூல் ஒரு திருமுகம் ஆகும்.

செந்தமிழ் இதழ் சிறக்க !

அரிய கட்டுரைகள் அறிவுக்கு விருந்தாக அமைகின்றன. வாழ்த்து !!!

இப்படிக்கு
முனைவர் நெல்லை ந. சொக்கலிங்கம்

சங்கப் பாடல்கள் உணர்த்தும் சமுதாயப் பழக்க வழக்கங்கள்

முனைவர் அ. ஜம்புலிங்கம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

ஒரு சமுதாயத்தின் அடிப்படைக் கூறே குடும்பம் ஆகும். பல பண்பட்ட குடும்பங்கள் சேர்ந்து இணைந்து வாழ்வதே ஒரு சமுதாய அமைப்பு ஆகும். திருந்திய வாழ்வினை மேற்கொள்ளும் குடும்பங்கள் இன்றி சமுதாய அமைப்பு உருவாக இயலாது. அதுவே சமுதாய மேம்பாட்டிற்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் அடிப்படை காரணமாக அமைகின்றது. பல குடும்பங்களில் அமையும் செம்மையான நெறிமுறைகள் தான் சமுதாயப் பண்புகளாகவும், பழக்க வழக்கங்களாகவும் அமைகின்றன. 1. நிமித்தம் பார்த்தல், 2. நம்பிக்கைகள், 3. கடவுள் நம்பிக்கை, 4. சகுனம் பார்த்தல், 5. நடுகல் வழிபாடு, 6. பலி இடுதல், 7. முதுமக்கட்டாழி, 8. அற ஒழுக்கம், 9. மகளிர் ஒழுக்கம், 10. ஆடவர் ஒழுக்கம், 11. இல்லற ஒழுக்கம், 12. விருந்தறம் போற்றல் போன்ற சமுதாயப் பழக்க வழக்கங்களைச் சங்கப் பாடல்கள்வழி அறிந்து இன்புறலாம்.

1. நிமித்தம் பார்த்தல்

ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன் நல்ல நாளும், கோளும், பொழுதும், நிமித்தமும் பார்த்துத் தொடங்குவது தமிழ் மக்களிடம் இருந்து வரும் ஒரு தொடர் வழக்கமாகும்.

நாள் நிமித்தத்தானும், புள் நிமித்தத்தானும் பிறவற்றின் நிமித்தத்தானும் நன்மை எய்தி நீடு வாழ் வேண்டுமெனத் தமிழக மக்கள் விரும்பினர். இதனைத் தொல்காப்பியம்,

"நாளும் புள்ளும் பிறவற்றி னிமித்தமும்
காலங் கண்ணிய ஓம் படை" (தொல். பொருள்: 36, 17-18)

என்று குறிப்பிடுகின்றது.

2. நம்பிக்கைகள்

வெள்ளியின் போக்கினை அறிந்து ஒரு நாட்டின் வாழ்வும், வீழ்வும்

அறியப்பட்டது. இது தென் திசையில் நகர்ந்தால் மழை பொய்த்து கடும் வறட்சி தோன்றும் என்ற நம்பிக்கை சங்க கால மக்களிடையே நிலவி வந்தது.

வெள்ளி, தான் நிற்க வேண்டிய வட திசையில் நின்று மழையினைப் பெய்வித்த செய்தியைப் பதிற்றுப்பத்து,

"அழல் சென்ற மருங்கின் வெள்ளியோடாது

மழை வேண்டு புலத்து மாறி நிற்ப" (13-25-26) என்ற பாடல் வழி எடுத்துக்காட்டுகிறது.

3. கடவுள் நம்பிக்கை

மரத்தை அடிப்படையாகக் கொண்டு பல நம்பிக்கைகள் உலகில் நிலவுகின்றன. கடவுள் உறையும் இடமாக மரத்தைக் கருதி வழிபட்டனர். ஊர்ப்பொதுவிடத்தில் அமைந்துள்ள பருத்த அடியையுடைய பனைமரத்தில் கடவுள் தங்கியிருக்கும் என்ற நம்பிக்கையினைத் தமிழக மக்கள் கொண்டிருந்தனர். இதனைத்

"தொன்றுறை கடவுள் சேர்ந்த பராரை

மன்றப் பெண்ணை" (303-3-4)

என்ற நற்றிணையின் பாடல் வழி, அறிய முடிகின்றது.

ஆல மரத்திலும் கடவுள் குடிகொண்டதாகத் தமிழக மக்கள் நம்பி வந்தனர். இதனை,

"நெடு வீழிட்ட கடவுளாலம்" (343-4) என்று நற்றிணை குறிப்பிடுகின்றது.

மரத்தின்கண் கடவுள் உறைவதாகச் சங்க கால மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை,

"கடவுள் மரத்த முள்மிடை குடம்பை" (270-12)

என்ற அகநானூற்று அடிகளால் அறியலாம்.

4. சகுனம் பார்த்தல்

ஒரு செயலைத் தொடங்கும் போது சகுனம் பார்க்கும் வழக்கம் அக்காலத்தே இருந்து வந்துள்ளது. இது நம்பிக்கையின் வழி ஏற்படும்

பழக்கமாகும். அவற்றில் ஒன்று விரிச்சி கேட்பதாகும். விரிச்சி கேட்கும் போது நெல்லும், நீரும் சொரிவது வழக்கமாகும். இவ்வழக்கம் சங்க காலத்தில் இருந்த தென்பதை,

"நென்னீ ரெறிந்து விரிச்சி யோர்க்கும்
செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா" (280-67)

என்னும் புறநானூற்றுப் புலவர் நப்பசலையார் அடிகளிலிருந்து அறிய முடிகிறது.

நெல்லையும், நீரையும் சொரிந்து விரிச்சி கேட்கும் பழக்கம் தமிழக மக்களிடையே நிலவி வந்தது என்பதனை,

"நெல்லோடு நாழிகொண்ட நறுவீ முல்லை
அரும்பவி ழலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப" (8-11)

என்ற முல்லைப் பாட்டின் வழி அறியலாம்.

"விரிச்சி கேட்கும் வழக்கம் இருந்தது என்பதனை,
புள்ளும் ஓரோம் விரிச்சியும் நில்லாம்" (27-17)

என்னும் குறுந்தொகைப் பாடலின் வழியும் அறியலாம்.

விரிச்சி கேட்டு நிற்கும் வழக்கத்தை

படையியங்கு அரவம் பாக்கத்து விரிச்சி

என்று தொல்காப்பியரும் கூறுவர்.

தலைவியைப் பிரிந்து பரத்தைபால் சென்றிருந்த தலைவன், அவன் வரவிற்காக மகளிர் விரிச்சி கேட்டதை,

"திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப" (35-13)

என்ற நற்றிணைப் பாடல் வழி அறியலாம்.

பண்டைக் கால மக்கள் பல்லியையேயன்றி ஓந்தியையும் நிமித்தம் பார்த்தற்குரியதாகக் கொண்டார்கள். அஃது,

"வேதினம் வெரிநின் ஓதிமுது போத்து
ஆறுசெல் மாக்கள் புட்கொளப் பொருந்தும்
சுரனே சென்றனர்காதலர்" (குறுந். - 140)

என்பதாம்.

5. நடுகல் வழிபாடு

போர்க்களம் சென்று போர் புரிந்து வீர மரணம் அடைந்த வீரர்களுக்குக் கல்லிலே இவ்வாறு பொருதுபட்டான் இன்னான் என்று அவன் புகழையும், பெயரையும் எழுதி, அவனைத் தெய்வ வழிபாடு செய்தனர் சங்க கால மக்கள்.

இதனை, மலைபடுகடாம்,
"பெயர் மருங் கறிமார்
கல்லெறிந் தெழுதிய நல்லரை மராஅத்த
கடவுள்" (394-96)

என்று குறிப்பிடுகின்றது.

இறந்தவர்க்குப் பெயர் சூட்டிச் சிறப்பிப்பதோடு அக்கல்லுக்கு மயிற்றோகை சூட்டித் துடியடித்து நெல்லாக்கிய கள்ளொடு ஆட்டினையும் பலி கொடுப்பர். இச்செய்தியை,

"நடுகற்பீலி சூட்டித் துடிப் படுத்துத்
தோப்பிக் கள்ளொடு துரூஉப்பிலி கொடுக்கும்" (35)

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகளால் அறியலாம்.

இத்தகைய முறையில் நடுகல் வழிபாட்டுப் பழக்கம் சங்க கால மக்களிடையே நிலவி வந்தது என்பது புலனாகின்றது. இப்பழக்கமே பிற்காலத்தில் பள்ளிப் படையாக மாறியது என்பது குறிப்பிடத்தக்கது.

6. பலியிடுதல்

வழிபடுவோரின் மீது முருகப் பெருமான் வெளிப்படுவான். அதனை வெறியாட்டு என்று கூறுவர். வெறியாட்டத்தின் பொழுது ஆட்டுக்கடாவைப் பலி கொடுக்கும் பழக்கம் தமிழக மக்களிடையே நிலவி வந்துள்ளது. இந்நிகழ்ச்சியைக் குறுந்தொகை,

"மறிக்குர லறுத்துத் தினைப்பிரப் பரீஇ" (153)

என்று கூறுகின்றது.

7. முதுமக்கட்டாழி

இறந்தவரைத் தீயிலிட்டு எரிக்கும் பழக்கம் தொன்றுதொட்டு இருந்து வந்துள்ளது. இதனை,

"...........................எமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயுமோ ரற்றே" (246)

என்ற பெருங்கோப்பெண்டு பாடல் வரிகளால் அறியலாம்.

களி மண்ணால் செய்யப்பட்டு தீயில் சுடப்பட்ட தாழியில் மன்னர் புதைக்கப்பட்டதை,

"மன்னர் மறைத் தாழி
வன்னி மன்றத்து விளங்கிய காடே"

என்று பதிற்றுப்பத்தில் கூறப்பட்டுள்ளது.

தன் கணவனோடு தானும் கூடியிருக்கும்படி பெரிய முதுமக்கட்டாழியைச் செய்யுமாறு பெண்ணொருத்தி குயவனிடம் கேட்பதாகப் புறநானூற்றுப் பாடல் ஒன்று உள்ளது.

"...................... எமக்கு மருளி
வியன்மல ரகன்பொழி லீமத் தாழி
அகலி தாக வனை மோ
நனந்தலை மூதூர்க் கலஞ்செய் கோவே" (256-4-7)

என்ற பாடல் அடிகளின் வழி இறந்து பட்டவர் உடலைத் தாழியில் இட்டுப் புதைக்கும் வழக்கம் சங்க காலத்தில் இருந்தது என்பது புலனாகின்றது.

6. அற ஒழுக்கம்

வழிச்செல்வோர் தண்ணீர் பெறாது துன்புறுவர் என்பது கருதி அதனை நீக்கும் பொருட்டு வழி நெடுகிலும் நெல்லி மரங்களை வைத்து

வளர்த்தனர் தமிழ் மக்கள். வழிச் செல்வோர், இவற்றின் கனியை உண்டு நீர் விடாயை மாற்றிக் கொள்வர். இச்செய்தியை,

"அறந்தலைப் பட்ட நெல்லி யங்கனி" (பா. 209)

என்று குறுந்தொகை பாடல் வழி அறியலாம்.

9. மகளிர் ஒழுக்கம்

தமிழக மகளிர் அனைவரும் திருமணம் நடக்கும் வரை சிலம்பு அணிந்திருப்பார்கள். திருமணம் முடிந்த பின் அணிவதில்லை. இது பண்டைக் காலத்திய தமிழ் மகளிர் ஒழுக்கங்களுள், ஒன்று. திருமணம் நடப்பதாக உறுதி செய்தவுடன் தாய் வீட்டில் சிலம்பு கழி நோன்பு என்ற ஒரு விழாக் கொண்டாடப்படும். தமிழ் மகளிர் அன்றே சிலம்பினை நீக்குவர். பெண்கள் திருமணம் ஆகப் பெற்றவர்களா இல்லையா என்றறிவதற்கு இது காரணமாய் இருந்தது. தலைவனுடன் உடன் போகின்ற தலைவியின் காலிற் சிலம்பு இருந்தமையறிந்து திருமணம் ஆகவில்லை என்று அறிந்தார்கள். இதனை

"வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே" (7)

என்ற குறுந்தொகை பாடலின் வழி அறியலாம்.

மாலைக் காலத்தில் மகளிர் தம்மைச் சீர்செய்து கொண்டு விளக்கங்களை வீடுகள் தோறும் ஏற்றி வைப்பர். இது பண்டைத் தமிழ் மகளிர் கொண்டிருந்த ஒழுக்கங்களுள் சிறந்தது என்று கூறலாம். இதனை,

"கனங்குழை மகளிர்
கைபுனையாக நெய்பெய்து மாட்டிய
சுடர் துயர் எடுப்பும் புன்கண் மாலை" (398)

என்ற குறுந்தொகை அடிகளால் உணரலாம்.

10. ஆடவர் ஒழுக்கம்

ஆடவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழிலை மேற்கொண்டிருந்தனர். இல்லறம் நிகழ்த்துவதில் அவர்கட்கு பேரூக்கம் இருந்தது. அது காரணமாக அவர்கள் நிலத்தினும் கலத்தினும் சென்று பொருளைத் தேடி வந்தனர். அவர்கள் தொழிலை உயிராக மதித்துப் போற்றி வந்தனர்.

"வினையே ஆடவர்க் குயிரே" (குறுந். 135)

என்பது பண்டைத் தமிழ் ஆடவர்கள் கொண்டிருந்த உள்ளத்தின் நிலையைத் தெள்ளிதின் புலப்படுத்துவது ஆகும்.

11. இல்லற ஒழுக்கம்

தாம் தேடிய பொருளைக் கொண்டே இல்லறம் நிகழ்த்துதல் வேண்டும் என்ற கொள்கை உடையவராயிருந்தனர் தமிழ் மக்கள். அங்ஙனம் இல்லறம் நடத்துதலே சிறப்பெனக் கருதினர். தாம் தேடிய பொருள் இல்லாமையே இரத்தலினும் இழிவாகக் கருதினர். இதனை,

"உள்ளது சிதைப்போர் உளரெனப் படார்.
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு" (283)

என்ற குறுந்தொகை அடிகளால் அறியலாம்.

12. விருந்தறம் போற்றல்

விருந்தோம்பலைத் தம் வாழ்வின் பயனாகக் கருதிப் போற்றி வந்த பழக்கமுடையவர் சங்ககாலத் தமிழர்கள். இறப்பைத் தடுக்கும் மருந்தாகிய இந்திரர்க்குரிய அமுதமே கிடைப்பதாயினும், அது தமக்கு இனியது எனக் கருதித் தாமே தனித்து உண்ணும் நெஞ்சம் கொண்டவர் அல்லர். இச்செய்தியினைப் புறநானூறு,

"இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே" (182)

என்ற பாடல் வழி புலப்படுத்துகின்றது.

பழங்காலத்துத் தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களை அறிவதற்குச் சங்க நூல்களே சிறந்த கருவிகளாக அமைகின்றன.

இந்திய தேசிய இயக்கமும் இலக்கிய கொள்கையும்

வை. சந்திரசேகர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

முன்னுரை

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடிமகள் இந்தியாவில் வாழ்ந்த போதிலும் அனைவரும் இந்தியர்கள் என்ற உணர்வை உணர்ந்திருக்கவில்லை. இந்தியா ஒரு நாடு என்ற கருத்தே இல்லாத போத அந்த நாடு விடுதலை பெறவேண்டும் என்ற எண்ணமோ, அதற்காக போராட வேண்டும் என்ற எழுச்சியோ மக்களிடம் ஏற்படவில்லை. பின்னர் இந்தியத் தேசியத் தலைவர்கள், வீரர்கள், தமிழ்க் கவிஞர்கள் வழியாக இந்தியா விடுதலைப் பெற்றது. அக்கவிஞர்களின் கொள்கைகளை இக்கட்டுரையில் காண்போம்.

தேசியம் - விளக்கம்

தேசியம் என்பது நவீன காலத்தில் தோன்றி வளர்ச்சியடைந்த ஒன்றாகும். பொதுமொழி, பொது நிலப்பகுதி, பொதுவான பொருளாதார வாழ்வு பொதுவான கலாச்சாரத்தை உள்ளடக்கிய மக்கள் சமூகத்தைக் கொண்டதே ஒரு தேசம் எனப்படுகின்றது. தேசியம் என்ற கருத்தானது தனி மனிதனின் சுதந்திரத்தைப் பிரதிபலிப்பதோடு மக்களிடையே ஒற்றுமையும், ஒருமைப்பாட்டையும், நாட்டுப்பற்றையும் ஊட்டி வளர்க்கிறது.

இந்திய மக்களிடையே ஏற்பட்ட தேசிய எழுச்சியானது ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு மட்டுமின்றி இந்தியாவில் ஆதிக்கம் செலுத்திய மேல்சாதி நிலவுடமையாளர்களுக்கும் எதிரானதாகவே இருந்தது. 19-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் தோன்றிய பிரம்மசமாஜம், ஆரிய சமாஜம், பிரார்த்தனசமாஜம், இராமகிருஷ்ணமிஷன் பிரம்மஞானசபை போன்றவைகள் இந்திய சமுதாயத்தில் நிலவிய சில மூடப்பழக்க வழக்கங்களை அடையாளம் காட்டிய போதிலும், அவ்வியக்கங்கள் மேல் வகுப்பினரின் நலன்களுக்கும் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கும் சாதகமாகவே

செயல்பட்டன. உண்மையாக மக்களிடையே தோன்றிய தேசிய எழுச்சியை வளர்த்தெடுக்க இவ்வியக்கங்கள் தவறிவிட்டன.

"முப்பது கோடி முகமுடையாள் எனில்
மொய்ம்புற வொன்றுடையாள்
செப்புமொழி பதினெட்டுடையாள் எனில்
சிந்தனை ஒன்றுடையாள்"

என்று பாரதி எழுபது ஆண்டுகட்கு முன்னர் பாடினான். ஆம் பாரதி பாடிய போது இந்திய மக்களின் தொகை முப்பது கோடி அந்த முப்பது கோடி மக்களின் ஒருமைப்பாட்டு உணர்வே தேசிய உணர்வு எனலாம். அன்று பாரதி கூறிய சிந்தனையே ஒருமைப்பாட்டு உணர்வுள்ள தேசிய உணர்வாகும்.

தமிழகத்தில் தேசிய எழுச்சியானது ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராக 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே வேரூன்றியிலிருந்தது. இதன் காரணமாகவே 1800-01ஆம் ஆண்டு தென்னிந்திய கலகமும், 1806ஆம் ஆண்டு வேலூர்க் கலகமும் வெடித்தன. இவ்வாறாக ஆங்கிலேயே ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு மக்களிடம் தோன்றிய காலகட்டத்தில் தமிழ்ச் சமுதாயத்தில் ஆரியர்களினால் ஏற்பட்ட சமுதாய இழிவுகளை எதிர்த்து வள்ளலார் மக்களிடம் விழிப்புணர்வை ஊட்டி வந்தார். இவரின் இக்கொள்கைகள் பின்னர் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்பட தூண்டு கோலாய் அமைந்தன.

தனிமனித சுதந்திரத்தை நிலைநிறுத்த சமூக ஏற்றத்தாழ்வுகளையும் உடைத்தெறிதல் வேண்டும் என்ற நோக்கத்தினைக் கொண்ட பல சமுதாயச் சீர்த்திருத்த வாதிகள் தங்களது உணர்வுகளை இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுத்தினர்.

இந்திய தேசியம்

இந்தியா உலகில் உள்ள பிறநாடுகளைப் போல் அரசியல், சமுதாயம், சமயம் மற்றும் பொருளாதாரம் போன்றவற்றில் ஒரே இலட்சியம் உடையதல்ல என்பது தெளிவு. ஏனெனில் இந்தியா பல்வேறு மொழி, இன கலாச்சாரத்தைக் கொண்ட மக்கள் வாழும் ஒரு நாடாகும். இந்தியாவில் ஒவ்வொரு தேசிய இனங்களில் இலட்சியங்கள் காக்கப்படுவதோடு அவர்களின் உணர்வுகளுக்கு

மதிப்பளித்தல் வேண்டும். ஆனால், இந்தியாவில் தேசிய இனங்கள் பல அடிமை நிலையில் அடக்கி ஆளப்பட்டு வருவதே நிகழ்வாக உள்ளது.

'தேசியம்' மக்கள் யாவரும் அனைத்து நிலைகளிலும் சமத்துவம், சுயமரியாதை என்ற பொதுவுடமை கொள்கைகளை உள்ளடக்கியதாகும். இதுவே உண்மையான தேச தேசியமாகும். நாட்டு மக்களிடம் எழுப்பப்படும் சமத்துவ சமுதாயக் கோட்பாடுகள் மனித நேயச் சிந்தனைகள் புதைந்து கிடக்கும் ஒருமைப்பாடுகளே தேசியம் எனப்படும்.

தேசியம் என்ற உணர்வானது பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் பல்வேறு நாடுகள் (Nation-States) தோன்றுவதற்கும் பல நாடுகள் காலனி ஆதிக்கப் பிடியிலிருந்து விடுதலை பெறவும் பெரும் உந்துசக்தியாக விளங்கியது. தேசியம் என்பதை வரையறுப்பது சற்று கடினமான செயல் என்றாலும் கூட மொழி, இனம், கலாச்சாரம் மற்றும் பண்பாட்டின் அடிப்படையில் தேசியம் என்பதை வரலாற்று அறிஞர்கள் வரையறைச் செய்கின்றனர்.

ஒரு பொதுமொழி, பொது நிலப்பகுதி, பொதுவான பொருளாதார வாழ்வு, பொதுவான பண்பாடாகப் பிரதிபலிக்கும் உயர்ப்பண்பு இவற்றின் அடிப்படையில் அமைந்து, வரலாற்று ரீதியாக உருவாக்கிய மக்கள் சமூகம் ஆகியவற்றைக் கொண்டதே ஒரு தேசம் (தேசியம்) என்று கருதப்படுகிறது. ஐரோப்பாவில்தான் தேசிய எழுச்சியும் தேச அரசுகளும் முதலில் உருவாயின.

இலக்கியங்களில் தேசிய விளக்கம்

காலந்தோறும் இலக்கிய வகைகள் தோன்றுவதற்கு அந்தந்த காலச் சூழல்கள் காரணமாக அமைந்துவிடுகின்றன. இலக்கிய வகை என்பது கூட ஒரு வகையில் தேவைக்கு ஏற்பவே தோன்றுகின்றன என்று கூறலாம்.

சமுதாயச் சூழல், மக்களின் எதிர்பார்ப்புகள் போன்றவற்றை அடியொற்றியே இலக்கியங்கள் தோன்றுதல் கூடும். இதனை, இலக்கிய வகையையும் காலச் சூழலையும் இணைத்துப் பார்க்கும் ஆய்வினால் மட்டுமே நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.

தாயகத்தின் விடுதலை வேட்கை வேரூன்றி இருந்த காலத்தில் மக்கள் தங்களுடைய முழுக் கவனத்தையும் நாடு விடுதலை பெற வேண்டும் என்பதிலேயே செலுத்தினர். இந்நிலையில் அவர்களுக்கு மிக எளிமையாகப்

புரிந்து கொள்ளும் மொழிநடை, உணர்ச்சியைத் தூண்டும் மொழிக் கூறுகள், தொன்மைக் கூறுகளை நடைமுறைக்குக் கொண்டு வரும் கருத்துப் பரவல்கள் போன்றவை பெரிதும் தேவைப்பட்டன. இத்தகைய தேவையின் அடிப்படையில் தான் விடுதலை இயக்கக் காலத்தில் மரபுநிலை மீறிய கவிதைகளும், உரைநடைத் தன்மைகள் கொண்ட இலக்கியங்களும் எழுந்தன.

மேற்கண்ட கருத்துக்களை ஆராய்ந்து நோக்கினால் அக்கால இலக்கிய வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சிக்கான தேவை, இலக்கிய படைப்பாளர்களின் மனநிலை, பின்புலங்கள், சமூக மக்கள் அவர்களை ஏற்றிக்கொண்ட மனப்பாங்கு, தேசியத்தின் வெளிப்பாடுகள் போன்றவைகள் எளிதில் விளங்கும், இவற்றின் வழி தமிழ் விடுதலை இலக்கியத்தில் தேசியமும் இழையோடுவதைக் காணலாம்.

தமிழகமும் தேசிய இயக்கமும்

இந்திய தேசிய எழுச்சிக்கு தமிழகத்தின் பங்கு அவசியமாக இருந்தது. உண்மையில் இந்திய தேசிய எழுச்சிக்கு வித்திட்டு ஒரு முன்னோடியாக திகழ்ந்தது தமிழகம் என்பதில் வியப்பேதுமில்லை. இதற்கான அடித்தளம் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே அமைக்கப்பட்டது. வீரபாண்டிய கட்டபொம்மன், மருதுசகோதரர்கள், பூலித்தேவன், ஊமத்துரை போன்ற தமிழ் பட்டாளமே ஆங்கில ஆட்சியை எதிர்த்து இந்திய தேசிய எழுச்சிக்கு அடித்தளம் அமைத்தனர்.

1806-ல் நடைபெற்ற வேலூர்க் கலகமானது ஆங்கிலேயரை எதிர்த்து 1857இல் நடத்தப்பட்ட புரட்சிக்கு முன்னோடியாக அமைந்தது. இந்திய தேசிய இயக்கத்தில் 20-ஆம் நூற்றாண்டிலும் தமிழகம் தொடர்ந்து செயலாற்றியது. வ.உ. சிதம்பரம், சுப்பிரமணிய சிவா, பாரதியார், பாரதிதாசன் போன்ற பல தலைவர்கள் இந்திய தேசிய எழுச்சிக்குத் தூண்டுதலாய் இருந்தனர். தமிழ்நாட்டில் தேசிய உணர்வு கட்டபொம்மன் காலத்திலிருந்தே தொடங்கியிருந்தாலும், இந்திய தேசிய இயக்கத்தை ஒட்டி வள்ளலார் காலத்தில் தான் மறுமலர்ச்சி இலக்கியமாக வடிவம் பெற்றது.

ம.பொ.சி. அவர்கள் ஆன்மீக ரீதியில் இந்து சமுதாயத்தில் நால்வருள் ஒருவராக அவரை அடையாளம் காட்டுகிறார். இராஜராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, இராமகிருஷ்ண பரமஹம்சர் ஏனைய மூவர் இராஜராம் மோகன்ராய்க்குப் பிறகு பிரம்மசமாஜ இயக்கத்தின் தலைவரான

கேசவவேந்திர சென் 1864–இல் சென்னை வந்து வேதசமாஜம் என்ற பெயரில் பிரம்ம சமாஜத்தின் கிளையை நிறுவினார் அதுதான் 1874இல் பிரம்ம சமாஜம் என அழைக்கப்பட்டது. கடலூரில் சப்பேடு பிந்தர சுவாமி என்ற பிரம்பசமாஜிக்கும், வள்ளலாருக்கும் உருவ வழிபாடு பற்றி வாதம் நடந்ததாகக் கூறுவர்.

வள்ளலாரின் அடிப்படைத் தத்துவம்

"ஆன்மீக ஒருமைப்பாடு ஒத்தாரும்
உயர்ந்தாரும் தாழ்ந்தாம் ஒருமை உளராகி
உலகியல் நடத்த வேண்டும் எவரும்"

என்று பாடினார். வள்ளலாரின் ஒருமைப்பாட்டுச் சிந்தனையை வியந்த 'பிளாவட்ஸ்கி' என்ற ரஷ்யப் பெண்மணியும், சார்லஸ் ஹெய்ம்ன்த் என்ற ஐரோப்பியரும் மகாத்மா ராமலிங்கம் என்றே குறிப்பிடுகின்றனர். கோபால கிருஷ்ண பாரதியின் 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை' சமய வைதீகத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும் எதிர்த்து வெளியிடப்பட்டது. இங்கே சேக்கிழாரின் சரிதம், சமுதாயப் பொருளாதார மாற்றங்களுக்கேற்ப, உழவனின் கதையாக உருவெடுக்கிறது. மாயூரம் வேதநாயகம்பிள்ளையின் 'சர்வ சமய சீர்த்தனைகளும்' இக்காலக் கட்டத்தைச் சேர்ந்தவையே.

ஆனால், வேதநாயகம் பிள்ளையிடமும், மனோன்மணியம் சுந்தரம் பிள்ளையிடமும் ஆங்கிலத் தாக்கம் மிகுதி. சுந்தரம் பிள்ளையின் மனோன்மணியத்தைத் தமிழிய அல்லது தமிழ்த் தேசியத்தின் முன்னோடி எனக் கொள்ளலாம்.

"எத்திசையும் புகழ்மணக்க
இருந்த தமிழணங்கே"

என்ற தமிழ்த்தாய் வாழ்த்து மட்டுமின்றி நாஞ்சில் நாட்டைச் சேர பாண்டிய நாடுகளுக்கிடையே எல்லைப் பிரச்சனையாக்கித் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டுகிறார்.

தமிழ்நாட்டின் இலக்கிய மறுமலர்ச்சிக்கு மற்றொரு காரணமான சங்க இலக்கிய மீட்சியும் இப்போதுதான் நடந்தது. குறிப்பாக 'ஐங்குருநூறு', 'பதிற்றுப்பத்து' ஆகியவற்றை 1903–04இல் உ.வே.சா. வெளியிட்டார்.

பாரதியாரின் இலக்கியக் கொள்கைகள்

தணியாத தமிழ்க்காதல் தேச பக்தியாகக் கனிந்து, சுதந்திர வேட்கை சமதர்மப்பற்றாக வளர்ந்து அரசியல் சுயேட்சையோடு வளர்ந்து அரசியல் சுயேட்சையோடு ஆன்ம விடுதலையும் எய்தி, நிறைவு பெற்ற மனிதன் நீதியும் நேர்மையும் நிலவும் சமுதாயத்தைச் சமைத்து, தாய்நாட்டோடு மட்டுமல்ல உயிரினங்கள் அனைத்துடனும் உளவுகொண்டு, அறத்தால் ஆட்சி செய்து, மக்களால் மாண்பு பெற்று, புதியதோர் உலகு படைக்க, தம் பாட்டால் பாதை வகுத்துத் தமிழ்நாட்டில் புரட்சிக்கு இலக்கிய வித்திட்டவர் பாரதி.

ஆங்கிலம், வடமொழி போன்ற பன்மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார் பாரதியார். யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல், இனிதாவதெங்கும் காணோம்; என்று செம்மாந்து பாடியுள்ளது. ஆராய்ச்சி அறிவை ஆதாரமாகக் கொண்டு, திறனாய்வு அடிப்படையில் நிலைநாட்டப்படக்கூடிய தெளிவான தீர்ப்பே ஆகும்.

1915-ஆம் ஆண்டு ஜுலையில் புதுச்சேரியிலிருந்து தம் நண்பர், பரலி. சு. நெல்லையப்பருக்கும் பாரதியார் எழுதிய கடிதத்தில், தமிழைவிட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும் போது எனக்கு வருத்தம் உண்டாகிறது. தமிழனைவிட அறிவிலும், வலிமையிலும் உயர்ந்திருப்பது எனக்கு சம்மதமில்லை என்று தமிழையும், தமிழனையும் உயர்த்துவதில் அவருக்கிருந்த வேட்கையை, ஏன் உணர்ச்சி வெறியையே வெளிப்படுத்தினார்.

தமிழ் என்பது ஒரு மொழி மட்டுமல்ல அது ஒரு வாழ்க்கை வழி, அறநெறி, இலட்சியப்பாதை என்று அவர் ஓம்பியதால்தான் தகைமைசால் வாழ்வுவாழ, தருமநெறி நின்று தழைக்க, தமிழ்க்காதல் வழிகாட்ட வேண்டுமென்று அவர் துடித்தார்.

பழம் பெருமையில் மட்டும் பதிந்து
நின்று விடாமல், படைப்பு இலக்கியங்களில்
பல புதுமைகளைக்கண்டு, உலக வளர்ச்சியால்
அறிவின் எல்லைக் கோடுகள் விரிவடை வதற்கேற்ப
மொழியின் வல்லமையும் வளத்தையும் வளர்க்க
வேண்டும் என்பதை அறிவுறுத்தினார்.

பண்டைத் தமிழ் வரலாற்றில் மண்டிக்கிடந்த பெருமைகளை அவர் துய்த்துத் தொழுத நேரத்திலே, காலத்துக்கு ஏற்ற ஓட்டம் பெற்று,

வளர்ச்சிக்கொத்த வலிவு அடைந்து புதுமைக்குரிய பொலிவு எய்தி, பூரண ஞானமும்இ புரட்சி எண்ணமும் பின்னிப் பிணைய, தமிழ்மொழி தழைத்தோங்கி தற்கால மொழியின் தகுதியை வளர்த்து எக்காலத்துக்கும் உரிய மொழியயென ஏற்றம் பெற வேண்டுமென எழுச்சிக் கொண்டு பாடினார்.

உண்மைத் தமிழனே உயர்ந்த இந்தியனாக, உருவாக முடியும் என்பதைப் பாரதியார் தம் தேசியப் பாடல்களில் உணர்த்தியுள்ள நேரத்திலே, தாய்நாட்டுப் பற்றாகப் பக்குவ மடையாத தாய்மொழிப் பற்று, வளர்ச்சி குன்ற வளம் வற்றி, வல்லமைசுருங்கி, வாய்மைதவறி வாழும் வழிகெட்ட குறுகிய கொள்கையாகவும், குதர்க்கக் கோட்பாடாகவும் குலைந்து விடும் என்று இடித்துரைத்தார்.

தமிழ் உணர்வும், தேசிய உணர்வும் இணைந்து ஒன்றுக்கொன்று ஆதாரமாய் நின்ற, படைப்பு இலக்கியத்தில் உச்ச வெளிப்பாட்டு நிலையை எய்தியது பாரதியின் தேசியப் பாடல்கள்தான். பாருக்குள்ளே நல்லநாடு - எங்கள் பாரத நாடு என்ற அவர் பாட்டில், பாரதம் என்பதற்கே இலக்கணம் வகுத்து, பண்டை நாட்களின் பெருமையைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

கத்தயின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர் என்ற துடிப்புமிக்க நாமக்கல் கவிஞரை பார்த்துத் தென்னகமே வியந்தது. இதைப் போல் தேசிய விநாயகம் பிள்ளை, வ.உ.சி., ஜீவா, திரு.வி.க. சுத்தானந்தபாரதியார் போன்றோரின் பாடல்களில் இந்திய தேசியம் இழையோடியது.

முடிவுரை

இனத்தால், மொழியால், சமயத்தால், பழக்க வழக்கங்களால் மாறுபட்டு அந்நிய ஆதிக்கத்தில் அவதியுற்ற மக்கள் எழுச்சியடைந்து ஒன்றுபட்டு ஆங்கிலேயர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றதின் விளக்கமே இந்திய தேசிய இயக்கத்தின் வரலாறு ஆகும்.

தமிழ் இலக்கியங்கள் நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் தேசத்தின் இரு கண்களாகக் கொண்டு விடுதலைப் போருக்குத் தொண்டாற்றின.

சான்றுகள்

1. ச. கணபதிராமன், தமிழன் கண்ட இந்திய ஒருமைப்பாடு, ப. 13
2. முனைவர் கா. செல்லப்பன், தமிழில் விடுதலை இலக்கியம், ப. 1
3. கா. திரவியம், தேசியம் வளர்த்த தமிழ், ப. 2

வாசகர் வாசகம் ②

அன்பார்ந்த செந்தமிழ் ஆசிரியர் பெருந்தகையீர்,

அன்பு நிறை வணக்கம். செந்தமிழ் ஆக. 11 இதழ் கிடைத்தது. அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்க்கு மிகுபயன் விளைப்பன. பத்துப்பாட்டு... கட்டுரையில் உணவு விளையும் நிலங்களுக்கான அகச்சான்றுகள் நன்கு அமைந்துள்ளன. கண்ணதாசனின் பாடல்.... அறிவுரைப் பகுதிச் சிந்திக்க வைக்கிறது; இளைஞன், கண்களை நம்பிப் பெண்ணைத் தேர்ந்தெடுப்பான்; ஆனால், பெற்றோர், காதுகளை நம்பித் தேர்ந்தெடுப்பதால், அதுவே சரியான தேர்வு என அவர் கூறிய அறிவுரை நினைவுக்கு வருகிறது. தமிழொலியால் பெயர்க்கப் பாவாணர் பணித்தனைத் தக்க இடத்தில் நினைவூட்டுகிறது... நூறடிப்பா. குருமுகம் கட்டுரையில் விருது பற்றிய உரையாடல், வாசகரின் மனத்தை மகிழவும், நெகிழவும் செய்கிறது. எளியேனின் கட்டுரையையும் வெளியிட்ட தங்களுக்கு நன்றி.

முதலில் பாவேந்தரின் பாச்சுவையைக் காட்டி அடுத்த கட்டுரையில் அவர் பெற்ற சாகித்ய அகாதமி பரிசு நினைவூட்டல் அமைய, நிரல் செய்து, இதழ் மணம் கமழச் செய்தத் தமிழ்ப்பணி தொடர வாழ்த்துகிறேன். அன்பு ஏற்றுக்கொள்ளுங்கள்.

இப்படிக்கு
புலவர் சி. பாண்டுரங்கன் ஆம்பூர்

வாசகர் வாசகம் ③

மதிப்புயர் செந்தமிழ் ஆசிரியப் பெருந்தகை அவர்கட்கு, வணக்கம் !

2011 ஆகஸ்ட் திங்கள் செந்தமிழில் முனைவர் அரசக் கண்ணனாரின் தனித்தமிழ் இலக்கண நூறடிப்பா என்ற கவிதை புதுப்பாவாக இருந்தது பாராட்டு ! முனைவர் மூர்த்தி அவர்களின் குருசாமி குருமுகம் அருமை ! அருமை ! கட்டுரை நீளமாய் நீள நினைந்த பல பதிவுகளைக் கொண்டதாய் இருந்தது. குறிப்பாக இதய தளத்தின் பதிவிறக்கமாகவே கட்டுரை அச்சாகியுள்ளது. பன்முகப் பார்வை என்பதற்கேற்பப் பல முகங்களையும் அவர்தம் அகங்களையும் குருசாமி வழி காண்கின்றோம். தெ.பொ.மீ.; மு.வ., திரு.வி.க., ம.பொ.சி. போன்றோரின் தமிழ்த் தொடர்பானச் செய்திகள் தமிழக வரலாற்றின் ஒரு கூறு எனலாம். கட்டுரையில் உலாவும் பல அறிஞர்களோடு கட்டுரையினைப் போல வாசகரையும் சந்திக்க வைத்த பெருமை திரு. து. மூர்த்தி அவர்களையே சாரும்.

நன்றி !

இப்படிக்கு
பேராசிரியர் தெ. முருகசாமி புதுச்சேரி

ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம்

54, தமிழ்ச் சங்கச் சாலை

மதுரை - 625 001

தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.

செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1

தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : **தவம் பிரிண்டர்ஸ்,** 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 October 2011 MA/130/2011-2013

Posted at Madurai BPC on 25th of every month

செந்தமிழ்க் கல்லூரி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

2011 - 2012ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது

- ✦ இளம் இலக்கியம் ✦ இளங்கலை ✦ முதுகலை
- ✦ இளம்நிலை ஆய்வாளர் ✦ முதுநிலை ஆய்வாளர்
- ✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் மு. மீனா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இரா. குருசாமி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

From

SECRETARY
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.